# ரி - பார்மா

உலகலாவிய ஊழிய திறன்களை மேம்படுத்துதல்

### காரியத்திட்டம் அ: பயன்பாடுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட கேள்விகள்

கீழே கட்டாயமாக எழுத வேண்டிய பயன்பாடுகளும், பரிந்துரைக்கப்பட்ட கேள்விகளும் கொடுக்கப் பட்டுள்ளது. அதன் மூலம் பயன்பாடுகளை கற்றுக்கொடுக்க அவை உங்களுக்கு உதவியாக இருக்கும். இந்த கேள்விகள் கட்டாயமானவைகளல்ல என்பதை கவனிக்கவும். மேலும் நீங்கள் மற்ற வழிகளையும் பயன்படுத்தலாம்.

| பயன்பாடுகள் | பரிந்துரைக்கப்பட்ட கேள்விகள் |
|---|---|
| 1. **வேத வசனங்களை அறிந்துக் கொள்ளுதல்,** இதை பொதுவாக வேதாகம இறையியல், பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு கண்ணோட்டம் என்று அழைக்கலாம். | |
| 1.1 பழைய ஏற்பாட்டின் 10 முக்கிய நிகழ்ச்சி களை குறிப்பிடுங்கள். பழைய ஏற்பாட்டின் 10 முக்கிய நபர்களைப் பற்றி பகிர்ந்துக் கொள்ளுங்கள். | பழைய ஏற்பாட்டின் 10 நபர்கள் மற்றும் 10 நிகழ்ச்சிகளைப் பயன்படுத்தி பழைய ஏற்பாடு அறிந்துகொள்வது ஏன் முக்கியமானது என்று புதிதாக பிறந்த ஒரு கிறிஸ்தவனுக்கு விளக்குங்கள். |
| 1.2 5 உதாரணங்களை பயன்படுத்தி இயேசு பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசனத்தை எப்படி நிறைவேற்றினார் என்று விளக்குங்கள். | ஒரு சபை விசுவாசி பொதுவாக புதிய ஏற்பாடு ஏன் பழைய ஏற்பாடு தீர்க்க தரிசனங்களை நிறைவேற்றினது என்பதை புரிந்து கொள்வ தில்லை, மேலும் அதைப் பற்றிய ஆராய்ச்சிக்கு நேரம் அதிகமாகும் என்று நினைக்கி றார்கள். பல உதாரணங்களை காண்பித்து அதை அவருக்கு விளக்கி இநத அறிவு நாம் விசுவாசத்தில் வளரவும் இயேசுவை நேசிக்கவும் உதவுகிறது என்பதை கூறுங்கள். |

| பயன்பாடுகள் | | பரிந்துரைக்கப்பட்ட கேள்விகள் |
|---|---|---|
| 1.3 | இயேசுவின் 5 முக்கிய உபதேசங்களைக் கூறுங்கள். | இயேசுவின் ஒவ்வொரு முக்கிய உபதேசத்திற்கும் உதாரணத்தைக் கூறுங்கள். இவைகளைக் கொண்டு ஆலோசனைத் தேவைப்படும் ஒரு விசுவாசிக்கு எப்படி உதவி செய்வீர்கள்? |
| 1.4 | இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் ஏன் மிகவும் முக்கியமானவை என்பதை விளக்குங்கள். | இயேசு ஒரு தீர்க்கதரிசியாக மிகவும் வெற்றியுள்ள ஒருவராக மட்டும் தான் இருந்தார் என்று நினைக்கிற ஒரு இஸ்லாமிய சகோதரனுக்கு இயேசு ஏன் மரித்தார் என்றும் அவருடைய உயிர்த்தெழுதல் மூலம் தான் வெற்றி என்பதையும் விளக்கிக் கூறுங்கள். |
| 1.5 | இயேசு தமது சீஷருடன் வைத்திருந்த உறவு இன்றைய நாள் பிறரை சீஷராக்க எவ்வாறு உதவுகிறது என்பதை விவரமாக கூறுங்கள். | இயேசுவுக்கு சீஷர்களுடன் இருந்த உறவின் கொள்கைகளை உங்கள் உள்ளூர் சபையில் எப்படி செயல்படுத்துவீர்கள்? |
| 1.6 | அப்போஸ்தல நடபடிகளின் புத்தகத்தின் 10 முக்கிய நிகழ்வுகளை விவரித்து கூறுங்கள். | அப்போஸ்தல நடபடிகளின் புத்தகத்திலுள்ள இந்த நிகழ்வுகள் உங்கள் சபையின் வரலாற்றில் எவ்வளவு முக்கியமானவை என்று விவரமாக கூறுங்கள். |
| 1.7 | பவுலின் முக்கிய உபதேசங்களில் குறைந்தது மூன்றை விளக்குங்கள் | பவுலின் அந்த உபதேசங்கள் உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் எவ்வளவு உதவியாக உள்ளது என்பதை விவரித்து கூறுங்கள். |
| 2. | **விசுவாசத்தினால் பிழைத்தல்** பொதுவாக நடைமுறை இறையியல், வேதாகம ஊழியம் சபை நடத்துதல், மற்றும் உறவுகள் என்று அழைக்கப்படுகிறது. | |
| 2.1 | பயனுள்ள பிரசங்கம் அல்லது கற்பித்தல் செயல்ப்படுத்துங்கள். | உங்களுடைய கருத்துக்களின்படி உங்களுடைய சிறந்த பிரசங்கம் அல்லது போதனை எது, உங்களின் மிகவும் பலவீனமான செய்தி எது அதன் காரணங்களை கூறுங்கள். |
| 2.2 | ஒரு குழுவினருக்கு ஒரு வேத பகுதியை வெற்றியாக விளக்குங்கள் | நீங்கள் வேத பகுதியை வெற்றியாக விளக்கி கூறின இரண்டு நிகழ்ச்சிகளை நினைத்து அதன் விளைவாக மற்ற கிறிஸ்தவர்கள் அதை வாழ்வில் செயல்ப்படுத்தினதை விளக்குங்கள். அவை ஏன் மிகவும் பயனுள்ளதாக இருந்தது? |

| பயன்பாடுகள் | பரிந்துரைக்கப்பட்ட கேள்விகள் |
|---|---|
| 2.3 வாழ்வின் அனைத்து பகுதிகளிலும் ஆவியின் கனிகளை கொடுங்கள். மேலும், தாழ்மை, உண்மை, மற்றும் எளிமையை கடைபிடியுங்கள். | புதிய ஏற்பாட்டில் கூறப்பட்ட ஆவியின் கனிகளுக்கும் உங்கள் கலாச்சாரம் மற்றும் சமுதாயத்தில் காணப்படும் சூழ்நிலை களுக்கும் இடையே உள்ள மிக பெரிய வேற்றுமை எது? |
| 2.4 ஆவிக்குரிய ஒழுக்கங்களை பட்டியலிட்டு விளக்கி கூறுங்கள் மற்றும் செயல்ப்படுத்துங்கள். | நீங்கள் செயல்ப்படுத்த மிகவும் சிரமப்படுகிற இரண்டு ஆவிக்குரிய ஒழுக்கங்கள் யாவை? அதற்காக நீங்கள் என்ன செய்கிறீர்கள்? |
| 2.5 சபை மக்களிடம் வேதாகம நீதி நெறிகள் கொள்கைகளை செயல்ப்படுத்துங்கள். | உங்கள் சபை மக்களின் நலன் மற்றும் எதிர் காலத்திற்கான மிக முக்கிய மூன்று நீதி நெறிக்கொள்கைகளை கூறுங்கள். அவை ஏன் முக்கியமானவை என்று விளக்குங்கள். |
| 2.6 அனைத்து உறவுகளிலும் மனதுருக்கம், கற்றுக்கொள்ளுதல் மற்றும் மன்னிப்பை வெளிப்படுத்துங்கள். குறிப்பாக விசேஷ தேவை உள்ளவர்களிடம். | "உன்னைப் போல உன் அயலானையும் நேசிப்பாயாக" என்பதின் கருத்தென்ன? மேலும் இயேசுவும் வேதமும ஏன் இதை முக்கியப்படுத்த வேண்டும்? ஓர் எடுத்துகாட்டாக குறைபாடு அல்லது விரக்தியில் வாழும் ஒருவரின் சூழ்நிலை எடுத்து கூறுங்கள். |
| 2.7 தயவையும், இரக்கத்தையும், உபசரிப்பையும் நடைமுறைப்படுத்துங்கள். | நேரடியாக சாட்சி கூறுவது பிரசங்கம் பண்ணுவதும் மட்டும் தான் சுவிசேஷம் அறிவிக்கும் ஒரே வழி மற்ற அனைத்தும் நேரத்தை வீணாக்கும் செயல் என்கிற கருத்துடன் வாழும் ஒரு சபை விசுவாசியிடம் வேதாகமத்தை கரத்தில் வைத்துக் கொண்டே தயவும் உபசரிப்பும் நேரத்தை வீணாக்குவ தல்ல, அது சுவிசேஷம் அறிவிக்கும் ஒரு வழி என்பதை தெளிவுப்படுத்துங்கள். |
| 3. **படைமுயற்சி,** இதை பொதுவாக சுவிசேஷ ஊழியம், மிஷன் மற்றும் சீஷத்துவம் என்று அழைக்கப்படுகிறது. | |
| 3.1 பிறரை சுவிசேஷ ஊழியத்திற்காக உற்சாகப்படுத்துங்கள். | சுவிசேஷ ஊழியத்தில் உங்கள் கூட உள்ள விசுவாசிகள் பங்கு பெற ஒரு சம்பாஷணை ஒழுங்குச் செய்யுங்கள். துவக்க முனையாக உங்கள் வேதாகமத்தைப் பயன்படுத்துங்கள். |
| 3.2 சுவிசேஷத்தை பயனுள்ளதாக பகிர்ந்து | தனிப்பட்ட முறையிலும் பகிரங்கமாகவும் |

| பயன்பாடுகள் | பரிந்துரைக்கப்பட்ட கேள்விகள் |
|---|---|
| கொள்ளுங்கள் நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் பிறருக்கு | சுவிசேஷம் அறிவிக்க உங்கள் காலாச்சாரத்தில் தடையாக இருக்கும் ஓரிரு காரியங்களை கூறுங்கள். மக்கள் வேதாகம சத்தியங்கள் மற்றும் தரத்தை கவனிக்க வேண்டும். |
| 3.3 குறைந்தது ஒரு நபரையாவது குறிப்பிட்ட ஒரு சுவிசேஷ ஊழியம் அல்லது மிஷனில் உருவாக்குங்கள். | சுவிசேஷ ஊழியம் மற்றும் மிஷன் ஊழியத்தில் ஒருவருக்கு இருக்கும் தாலந்தை மேம்படுத்த அவரை நீங்கள் வெற்றியாக உருவாக்கினதை அல்லது சீஷத்துவப் பயிற்சிக் கொடுத்ததைப் பற்றி விளக்குங்கள். |
| 3.4 வேதாகமம் கலாச்சாரத்திலும் முக்கியமானது என்பதைக் கூறுங்கள். | தங்கள் கலாச்சார மரபுகளை பின்பற்றுவதிலும் அதிகமாக வேதாகம சத்தியங்கள் மற்றும் தரத்தை பின்பற்றினால் உங்கள் கலாச்சாரம் மற்றும் சமுதாயம் நன்மையடையும் என்பதற்கான மூன்று உதாரணங்களைக் கூறுங்கள். |
| 3.5 ஊழியத்திற்காக தொழில் நுட்ப மற்றும் சமூகவலைதளத்தை பயன்படுத்துங்கள். | உங்கள் சூழலில் மிகவும் பயனுள்ள தொழில் நுட்பம் சமூக வலைதளம் எது?<br>நீங்களும் உங்கள் சபையும் இதை சிறப்பாக பயன்படுத்த எப்படி முதலீடு செய்கிறீர்கள்? |
| 3.6 பணிவிடை தலைமத்துவத்தை வெளிப்படுத்தி காண்பியுங்கள். | ஒரு சபை தலைவரை கனம் பண்ண வேண்டும் மற்ற மக்கள் அவருக்கு பணிவிடைச் செய்ய வேண்டும் என்று நினைக்கும் ஒருவருக்கு அதை விளக்கிக் கூறுங்கள். இயேசு ஏன் வித்தியாசமாக செயல்பட்டார். மேலும் ஏன் இது சபை மண்டலத்தில் கிறிஸ்தவனுக்கு முக்கியமாக உள்ளது? |
| 3.7 சபையில் ஏதாவது ஒரு தலைமைத்துவ பொறுப்பில் பணிவிடைச் செய்ய 3 பேரை அடையாளம் கண்டு பயிற்சிக் கொடுங்கள். | ஒருவரின் தலைமத்துவ திறமைகளில் அவர் வளர நீங்கள் அவருக்கு உதவிய மூன்று வழிகளை பட்டியலிட்டு விளக்குங்கள். |
| 4. **கவனித்தல் மற்றும் உற்சாகப்படுத்தப் படுதல்** பொதுவாக ஆலோசனை, குடும்பம் என்று அழைக்கப்படுகிது. | |

| பயன்பாடுகள் | பரிந்துரைக்கப்பட்ட கேள்விகள் |
| --- | --- |
| 4.1 குழப்பங்கள், மரணம், திருமண பிரச்சனைகள் மற்றும் நோய் போன்ற நேரங்களில் பிறருக்கு உதவி செய்யுங்கள், உற்சாகப்படுத்துங்கள். | கடினமான குழப்பங்கள் மத்தியில் இருக்கும் மக்களுக்கு நீங்கள் உதவின மூன்று காரியங்களை விளக்கிக் கூறுங்கள். |
| 4.2 ஒரு தம்பதியினருக்கு அவர்களின் திருமண பிரச்சனைகள், நோய்கள் மற்றும் மரணத்தை சந்திக்க ஆயத்தப்படும்படி உதவி செய்யுங்கள். | உங்கள் கலாசாரத்தில் எதிர்கால திருமணத்தில் காணப்படும் முக்கியமான மூன்று பிரச்சனைகள் யாவை? ஏன் என்று விளக்குங்கள். |
| 4.3 வேதாகமத்தில் தேவன் குழந்தைகளை பயன்படுத்திய 7 நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுங்கள். | குழந்தைகளைப் பற்றி உங்கள் சபையில் பிரசங்கித்து சவால் கொடுக்க வேண்டிய சூழல் வந்தால் எந்த இரண்டு நிகழ்ச்சிகளை பயன்படுத்துவீர்கள். ஏன்? |
| 4.4 இயேசு குழந்தைகளிடம் காண்பித்த மனப்பான்மை சபையை எப்படி மாற்ற வேண்டுமென்று விளக்குங்கள். | இயேசுவுக்கு குழந்தைகளிடம் இருந்த மனப்பான்மை உங்கள் (அ) கலாச்சாரம் (ஆ) உங்கள் சபையுடன் ஒப்பிட்டு பேசுங்கள். உங்கள் சபையிலும் உங்கள் கலாச்சாரத்திலும் சவாலாக இருக்கும் இரண்டு காரியங்களை குறிப்பிடுங்கள். |
| 4.5 சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை ஊழியத்தில் பங்குபெறச் செய்யுங்கள். | உங்கள் சபையில் குழந்தைகளுடன் வேலைச் செய்வது கடினமா அல்லது பெரியவர்களுடன் வேலைச் செய்வது கடினமா? ஏன் அப்படி? மேலும் உங்களின் விருப்பம் எங்கேயிருந்து வந்தது. (எ.கா உங்கள் குடும்பம்) |
| 4.6 திருமணம் மற்றும் குடும்பத்தில் உண்மை மற்றும் அன்பை ஊட்டுங்கள். | ஒரு திருமணத்தின் ஆவிக்குறிய நிலை மற்றும் தாய் தகப்பனிடையே உள்ள உறவு குழந்தைகளின் வளர்ச்சியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் மூன்று காரியங்களைக் கூறுங்கள். |
| 4.7 தகப்பனற்ற குடும்பத்தின் பாதிப்புகளை விவரிக்கவும். | ஒரு சபை அங்கத்தினருக்கு அவருடைய சபையில் கொடுக்கப்பட்ட பொறுப்பு அவருடைய வேலை, சமுதாயம், அரசியல் மற்றும் அவருடைய குழந்தைகளுடன் நேரம் செலவு செய்வதைப் பார்க்கிலும் அதிகமாக இருக்கும் போதும் அவருடை மனைவி இந்த வேலைகளை சிறப்பாக செய்ய வாய்ப்பிருக்கும் போது நீங்கள் எப்படி ஆலோசனை கொடுப்பீர்கள்? |

| பயன்பாடுகள் | பரிந்துரைக்கப்பட்ட கேள்விகள் |
|---|---|
| 5. **நம்பத் தகுந்த விசுவாசம்,** பொதுவாக இறையியல், நீதி நெறி, சபை வரலாறு மற்றும் உக்கிராணத்துவம் என்று அழைக்கப்படுகிறது. | |
| 5.1 ஆரோக்கியமான உபதேசத்தை விசுவாசித்து செயல்ப்படுத்தல் | ஆரோக்கியமான உபதேசம் ஏன் முக்கியமானது? |
| 5.2 புதிய ஏற்பாட்டின் முக்கிய உபதேசங்களை சுருக்கமாகக் கூறி விளக்குங்கள். | புதிதாக பிறந்த ஒரு கிறிஸ்தவன் அறிந்துக் கொள்ள வேண்டிய முக்கிய உபதேசங்கள் யாவை, ஏன்? |
| 5.3 சபை வரலாற்றின் முக்கிய மூன்று நிகழ்வுகளை குறிப்பிடுங்கள் | ஒரு கிறிஸ்தவன் உங்களிடம் அவருக்கு சபை வரலாற்றில் ஆர்வம் இல்லையென்றும் வேதாகமம் மட்டும் அறிந்து கொண்டால் அது போதுமானது என்றும் கூறினால் நீங்கள் எப்படி பதில் கூறுவீர்கள்? எந்த நிகழ்வு (அல்லது நபர்) கற்றுக்கொள்ள தகுதியானது என்று நினைக்கிறீர்கள்? காரணத்தைக் கூறுவீர்களா? |
| 5.4 உங்களுடைய சபை (அல்லது சபை ஸ்தாபனம்) எப்படி உருவானது என்பதை விளக்குங்கள். | உங்கள் சபை விசுவாசி ஒருவருக்கு ஒரு நல்ல மாதிரியாக உங்கள் சபை நிறுவினவர் களில் ஒருவரை சுட்டி காண்பிக்க நினைத்தால் யாரை தெரிவு செய்வீர்கள்? இந்த நபர் மற்றவர்களுக்கு விசுவாசத்தில் எவ்வாறு மாதிரியாக இருக்கிறார்? |
| 5.5 உக்கிராணத்துவம், கொடுத்தல் மற்றும் காணிக்கைகளுக்கு வேதாகம ஆதாரததைக் கூறுங்கள் | உங்கள் வேதாகமத்தை வைத்து விசுவாசிகள் ஊழியத்திற்கு கொடுக்க வேண்டுமென்பதற்கு 5 புதிய ஏற்பாடு வேத பகுதிகளைக் கூறுங்கள் |
| 5.6 செழிப்பின் சுவிசேஷம் வேதத்தி லில்லாததும் நீதி நெறியில்லாததும் என்பதை விளக்குங்கள். (குறிப்பாக : உங்கள் பகுதியில் செழிப்பின் உபதேசம் ஒரு பிரச்சனையாக இல்லையென்றால் மிகவும் முக்கியமான வேறொரு பிரச்சனையைப் பற்றிப் பேசுங்கள்) | உங்கள் சபையை விட்டு விலகி வாழ்வில் செழிப்பாக இருக்க விரும்பி, ஆரோக்கியம் மற்றும் செழிப்பை உபதேசிக்கும் சபையில் கலந்துக் கொள்ள விரும்பும் உங்கள் சபை அங்கத்தினர் ஒருவருக்கு வேதாகம் அடிப்படையில் மூன்று காரியங்களை விவரித்து விளக்குங்கள். |
| 5.7 சபையின் முக்கியத்துவத்தைப் பற்றி விவரித்து கூறுங்கள். | உங்கள் சபையைச் சேர்ந்த ஒருவர் இயேசுவை நேசிக்கிறார். ஆனால் அவருடைய சபையைச் சேர்ந்த மற்ற கிறிஸ்தவர்களுடன் கூட வருவதை கடினமான பாரமாக நினைக்கிறார். அவர் வீட்டிலேயே இருக்க முடியாது என்று எப்படி விளக்குவீர்கள். |